2019 ஜூலை 3]

மாண்புமிகு திரு. பா. பெஞ்சமின்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு என்ற இடத்தில் தொழிற்பேட்டை ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவாலங்காடு பகுதியில் புதிய தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தேவையான உகந்த நிலங்கள் அங்கே கிடைக்கும்பட்சத்தில், புதிய தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வரும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, விதிகளுக்குட்பட்டு புதிய தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலையும் பார்க்கின்றபோது, ஏற்கெனவே இருவரும்* pre–planned *ஆக வந்திருப்பார்கள் போலத் தெரிகிறது. (சிரிப்பு)*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

சமுதாயக் கூடம்

***13779—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், பெருந்தொழுவு ஊராட்சி, கவுண்டம்பாளைம் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எங்களை வாழ வைக்கும் மனிதர்குல மாணிக்கம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடிகளை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்கி, எனது பதிலினை பதிவு செய்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், பெருந்தொழுவு ஊராட்சி, கவுண்டம்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுவது குறித்து ஆதி திராவிட மக்கள் தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட சமுதாய மக்களின் குல தெய்வக் கோயில்களுக்கும் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்திட கோயில் ஒன்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை சிறப்பாக வழிநடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய தங்களையும் வணங்குகிறேன்.

2019 ஜூலை 3]

எனது பல்லடம் சட்டமன்றத் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், பெருந்தொழுவு ஊராட்சிக்குட்பட்ட கவுண்டம்பாளையம் கிராமத்தில் வாழ்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்ததற்கு, அங்கே வாழ்கின்ற ஆதி திராவிட மக்கள் தொகைக்கேற்பவும், இட வசதிக்கேற்பவும் பரிசீலிக்கப்படும் என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயக் கூடங்கள் என்பது கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஆதி திராவிட மக்களுடைய தேவைக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஆதி திராவிட மக்கள் மிகவும் நிதி நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிறு, சிறு விசேஷங்களுக்குக்கூட திருமண மண்டபங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையிலும், திருமண மண்டபங்கள் நிர்ணயிக்கின்ற வாடகைக் கட்டணங்களைச் செலுத்த முடியாத சூழ்நிலையிலும் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எனது பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், பெருந்தொழுவு ஊராட்சி, கவுண்டம்பாளையம் கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடத்தைக் கட்டித் தருவதுபோல, எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கேத்தனூர் ஊராட்சி அம்மா நகரிலும், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முதலிபாளையம் ஊராட்சி எம்.ஜி.ஆர். நகரிலும், பல்லடம் ஒன்றியம், இச்சிப்பட்டி ஊராட்சி கோம்பக்காடு பகுதியிலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. அ. நடராஜன்: *சமுதாயக் கூடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டில் 24 சமுதாயக்*

கூடங்களும், 2013–2014 ஆம் ஆண்டில் 5 சமுதாயக் கூடங்களும், 2014–2015 ஆம் ஆண்டில் 7 சமுதாயக் கூடங்களும், 2016–2017 ஆம் ஆண்டில் ஒரு சமுதாயக் கூடமும், 2017–2018 ஆம் ஆண்டில் 10 சமுதாயக் கூடங்களும், ஆக மொத்தத்தில் 47 சமுதாயக் கூடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. சமுதாயக் கூடங்களைப் பொறுத்தமட்டில், ஒவ்வோர் ஆண்டும் இதற்காக ஒதுக்கப்படுகின்ற நிதியினை வைத்து, அந்தந்த ஆண்டிலேயே அனைத்து மாவட்டங்களிலும் சமுதாயக் கூடங்களைக் கட்டித் தருவது என்பது இயலாத நிலை. எனவே, பெறப்படும் முன்மொழிவுகளின் அடிப்படையில், நிதி ஒதுக்கீட்டினைக் கணக்கில்கொண்டு, தேவையின் அடிப்படையில் இது வழங்கப்பட்டு வருகிறது.

பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், பெருந்தொழுவு ஊராட்சி, கவுண்டம்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் அருந்ததியினர் சமூகத்தினைச் சேர்ந்த 150 குடும்பங்களைச் சேர்ந்த 500 பேர் வசித்து வருகிறார்கள். பெருந்தொழுவு ஊராட்சியினைச் சுற்றி 11 குக்கிராமங்கள் உள்ளன. இங்கிருந்து 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மணியம்பாளையம் என்ற இடத்தில் 100 நபர்கள் அமரும் வகையில் ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாக வழங்கப்பட்ட சமுதாயக் கூடத்தினை தற்போது அப்பகுதி மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை தொடர்பாக உரிய ஆவணங்களைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்படுகின்ற நிதிக்கேற்ப குறைவான கட்டடங்களே கட்டப்படும் என்றும், அந்தவகையிலே பரிசீலிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக ஒதுக்கீடு செய்து, அந்தந்த மாவட்ட நிருவாகம் மூலமாக ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதியில் குடிநீர் வசதி, வடிகால் வசதிகளை அமைத்தல், மயானப்

2019 ஜூலை 3]

பாதை அமைத்தல் போன்ற பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, கடந்த காலங்களில் பல கிராமங்களில் கட்டப்பட்டிருக்கின்ற சமுதாயக் கூடங்கள் சிறு சிறு பழுதுகளால் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளன. எனவே, குறைந்த செலவில் அந்தப் பழுதடைந்த சமுதாயக் கூடங்களையெல்லாம் பழுதுபார்த்து, மக்கள் பயன்பாட்டிற்கு நீங்கள் அர்ப்பணிப்பீர்களேயானால், மக்கள் அனைவரும் பயனடைவார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

குடமுழுக்கு

***7371—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, ஆறகளூர் கிராமத்திலுள்ள அருள்மிகு காமநாதீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?